**O.S. 125 /2017 , 04.08.2021, 01.05 pm**

**வா.சா.1: C.வேலன் த/பெ. சின்னதம்பி**

**முதல் விசாரணை:-**

திருப்பத்தூர் மாவட்டம் , வாணியம்பாடி தாலுக்கா , குருசிலாப்பட்டு அஞ்சல், தலுகன் வட்டத்தில் வசிக்கும், இந்து, விவசாயம், சின்னதம்பி குமாரர் சுமார் 45 வயதுடைய C.வேலன் ஆகிய நான் பிரமாணமாய் கூறுவது யாதெனில்,

சத்தியமாக சொல்கிறேன். என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 07.10.1996 தேதியிட்ட என்னுடைய தகப்பனார் சின்னதம்பி பெயரில் உள்ள பாக பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.1ஆகும். என்னுடைய தகப்பனார் பெயரில் வரி ரசிது ( வரிசை 4) வா.சா.ஆ.2 ஆகும் . சின்னதம்பி பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ 3 ஆகும். 30.08.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ. 4 ஆகும். 19.09.2017 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் பெற்று கொண்டதற்கான ஒப்புகை அட்டை வா.சா.ஆ.5 ஆகும்.15.09.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ. 6 ஆகும்.10 பிரதிவாதி அறிவிப்பை பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.7 ஆகும். 1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.8 ஆகும். 8ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.9 ஆகும். 7ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.10 ஆகும். தாவாப்படி தீர்பாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.